**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## 2023-ம் ஆண்டின் சுத்தமான நகரம் தரவரிசை பட்டியல்: தமிழகத்தில் மறைமலை நகர் நகராட்சி முதலிடம்

**செங்கல்பட்டு:** பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறார். அதன் அடிப்படையில் தூய்மை பராமரிப்பில் சிறப்பாகச் செயல்படும் நகரங்களைக் கண்டறிந்து கவுரவப்படுத்தி ஊக்குவிக்கும் வகையில், `ஸ்வச் சர்வேக்ஷன்' என்ற தூய்மையான நகரங்களுக்கான விருது வழங்கும் திட்டத்தை 2016-ம் ஆண்டில் பிரதமர் அறிமுகம் செய்து வைத்தார்.

`ஸ்வச் பாரத் அபியான்' திட்டத்தின் ஒரு பகுதியாகத் தொடங்கப்பட்ட இதன்படி, தேசிய அளவில் தூய்மையில் சிறந்து விளங்கும் நகரங்கள் குறித்த தரவரிசை பட்டியலை பல்வேறு பிரிவுகளின் கீழ், ஒவ்வோர் ஆண்டும், மத்தியவீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில், 2023-ம் ஆண்டுக்கான ஸ்வச் சர்வேக்ஷன் முடிவுகளை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்டார். அதன்படி தமிழகத்தின் தூய்மைநகரங்கள் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 20 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் உள்ளன. இதில் செங்கல்பட்டு மாவட்டத்தில் 3 நகராட்சிகள், ஒரு மாநகராட்சி, 6 பேரூராட்சிகள் என 10 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. இதில் மறைமலை நகர் நகராட்சி தரவரிசை பட்டியலில் முதல் இடமும், மதுராந்தகம் 57-வது இடமும், செங்கல்பட்டு 93-வது இடமும் பெற்றுள்ளன.

தாம்பரம் மாநகராட்சி 13-வது இடமும், பேரூராட்சிகளில் கருங்குழி 135-வது இடமும், திருப்போரூர் 208-வது இடமும், அச்சிறுபாக்கம் 308-வது இடமும், திருக்கழுக்குன்றம் 322-வது இடமும், மாமல்லபுரம் 369-வது இடமும், இடைக்கழிநாடு 540-வது இடமும் பிடித்துள்ளன.

மறைமலை நகர் நகராட்சி தமிழக அளவிலும் முதலிடம் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. குப்பையை கையாளுதல், பிளாஸ்டிக் கழிவுகளை

நிர்வகித்தல், குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி செய்தல், தூய்மை பணியாளர்களின் பாதுகாப்புபோன்ற கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்து, மேற்கண்ட தரவரிசை பட்டியல் தயார் செய்யப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

## எண்ணூரில் 2.20 லட்சம் லிட்டர் எண்ணெய் கழிவு அகற்றம்: பசுமை தீர்ப்பாயத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிக்கை

**சென்னை:** எண்ணூரில் எண்ணெய் கழிவுகளை அகற்றும் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. இதுவரை 2.20 லட்சம் லிட்டர் எண்ணெய் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன என்று தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

சென்னையில் கடந்த மாதம் அதிகனமழை பெய்து பெருவெள்ளம் ஏற்பட்டபோது, மணலி பகுதியில் உள்ள சிபிசிஎல் நிறுவனம் அருகில் இருந்து பக்கிங்ஹாம் கால்வாய் வழியாக பரவிய எண்ணெய் படலம், கொசஸ்தலை ஆறு, எண்ணூர் கழிமுகம் வழியாக கடலில் கலந்தது. கடலில் சுமார் 20 கி.மீ. தூரத்துக்கு எண்ணெய் பரவியதால், மீன்கள் செத்து மிதந்தன. கருப்பு நிறத்தில் தார் போன்ற கழிவு படிந்ததால், மீன்பிடி படகுகள், வலைகள் பாழாகின. குடியிருப்பு சுவர்கள், தெருக்கள், தாவரங்கள் மீதும் எண்ணெய் படலம் படிந்ததால், மீனவர்கள், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

இதுதொடர்பாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வுதாமாக முன்வந்து வழக்காக எடுத்தது. எண்ணெய் கசிவு குறித்து ஆய்வுசெய்ய வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் 9 பேர் கொண்ட உயர்நிலை குழுவும் அமைத்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், தீர்ப்பாய அமர்வின் நீதித் துறை உறுப்பினர் புஷ்பா சத்யநாராயணா, தொழில்நுட்ப உறுப்பினர்கே.சத்யகோபால் முன்பு இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தற்போதைய நிலவரம் குறித்துமாசு கட்டுப்பாட்டு வாரியம், சிபிசிஎல்சார்பில் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. அதில் கூறப்பட்டிருந்ததாவது:

மாசு கட்டுப்பாட்டு வாரியம்: சிபிசிஎல் நிறுவனத்தில் இருந்து வெளியேறிய எண்ணெய் கழிவுகளைஅகற்றும் பணி பெரும்பாலான இடங்களில் முடிவடைந்தது. சதுப்புநில தாவரங்கள் உள்ள பகுதியில் மட்டும் கழிவுகளை அகற்றும் பணி நடந்து வருகிறது. இதுவரை 2 லட்சத்து 20 ஆயிரத்து 240 லிட்டர் அளவுக்கு நீர் கலந்த எண்ணெய் கழிவுகள் அகற்றப்பட்டு, சிபிசிஎல் வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மண், குப்பையுடன் 660 டன்எண்ணெய் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. இவற்றை உயிரி முறையில் அழிக்க கோவாவில் உள்ள தேசியகடல்சார் நிறுவனம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சிபிசிஎல் அறிக்கை: கடந்த டிசம்பர் 4-ம் தேதி மணலி பகுதியில் பெய்த கனமழையால் சிபிசிஎல் பகுதியில் நீரின் அளவு உயர்ந்தது. ஆனாலும், அதன் தாக்கத்தால் ஆலையில் எந்த விதிமீறலும், அலட்சிய செயலும்நடக்கவில்லை. அந்த காலகட்டத்தில் சிபிசிஎல் ஆலையில் குழாய் கசிவோ, தொட்டி கசிவோ, உபகரணங்கள் செயல்பாட்டில் குறைபாடோ ஏற்படவில்லை. இருப்பினும் மக்கள் மீதானஅக்கறை, பொறுப்புணர்வு அடிப்படையில், இக்கட்டான சூழலில் எண்ணெய் கசிவை அகற்றும் பணிகளில் சிபிசிஎல் நிறுவனம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. ஐஐடி மற்றும் இதர துறைகளின் அறிக்கைகள் கிடைத்த பிறகு, உரியஉத்தரவு பிறப்பிக்கப்படும் என்றுஉத்தரவிட்ட அமர்வின் உறுப்பினர்கள், விசாரணையை பிப்ரவரி 27-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## மல்யுத்தத்தில் தங்கம் வென்றார் அமன் ஷெராவத்

**ஜாக்ரெப்:** குரோஷியா நாட்டின் தலைநகரான ஜாக்ரெப்பில் ஜாக்ரெப் ஓபன் மல்யுத்த போட்டி நடைபெற்று வருகிறது. தரவரிசை தொடரான இதில் 57 கிலோ எடைப் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் அமன் ஷெராவத், உலகத் தரவரிசையில் 7-வது இடத்தில் உள்ள சீனாவின் வான்ஹாவோ சூ உடன் மோதினார். இதில் அமன் ஷெராவத் 10-0 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

முன்னதாக நடைபெற்ற முதல் சுற்றில் தரவரிசையில் 13-வது இடத்தில் உள்ள அமன் ஷெராவத் 15-4 என்ற கணக்கில் துருக்கியின் முகமது கரவுஸையும், கால் இறுதி சுற்றில் 11-0 என்ற கணக்கில் அமெரிக்காவின் ரிச்சர்ட்ஸ் ஜேன் ரே ரோட்ஸையும், அரை இறுதியில் 11-0 என்ற கணக்கில் ஜார்ஜியாவின் ராபர்டி திங்காஷ்விலியையும் தோற்கடித்தார்.

86 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் தீபக் பூனியா முதல் சுற்றில் கஜகஸ்தானின் அசாமத் தவுலத்பெகோவிடம் தோல்வி அடைந்தார். எனினும் அசாமத் இறுதி சுற்றுக்கு முன்னேறியதால் தீபக் பூனியாவுக்கு ரெப்பேஜ் சுற்றில் விளையாடுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இதை அவர், சரியாக பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்.

## துப்பாக்கி சுடுதலில் தங்கப் பதக்கம் வென்றார் நான்சி

**ஜகார்த்தா:** பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான துப்பாக்கி சுடுதல் ஆசிய தகுதி சுற்று இந்தோனேஷியாவின் ஜகார்த்தா நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் நான்சி 252.8 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார்.

மற்றொரு இந்திய வீராங்கனையான இளவேனில் வாலறிவன் 252.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் ருத்ராங்ஷ் பாட்டீல் 228.7 புள்ளிகள் சேர்த்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

## இஸ்ரோவுக்கு 2023-க்கான ‘இந்தியன் ஆஃப் தி இயர்’ விருதை வழங்கியது மத்திய அரசு

**புதுடெல்லி:** 2023-ம் ஆண்டுக்கான ‘சிறந்த சாதனையாளர்’ பிரிவில் ‘இந்தியன் ஆஃப் தி இயர்’ விருதை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு (இஸ்ரோ), மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (தனிப்பொறுப்பு) அமைச்சர் ஜிதேந்திர சிங் வழங்கினார்.

2023-ம் ஆண்டுக்கான ‘சிறந்த சாதனையாளர்’ என்ற பிரிவில் ‘இந்தியன் ஆஃப் தி இயர்’ விருதை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்துக்கு (இஸ்ரோ), மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை (தனிப்பொறுப்பு) பிரதமர் அலுவலகம், பணியாளர், பொதுமக்கள் குறைகள், ஓய்வூதியம், அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் வழங்கினார். தேசிய தொலைக்காட்சி சேனல் நிறுவிய இந்த விருதை இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத், சந்திரயான் 3 திட்ட இயக்குநர் டாக்டர் பி.வீரமுத்துவேல் ஆகியோர் புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் பெற்றுக் கொண்டனர். விண்வெளி ஆராய்ச்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்வதில் இஸ்ரோவின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரித்து இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

"2023-ம் ஆண்டு சந்தேகத்துக்கு இடமின்றி இஸ்ரோ சவால்களை எதிர்கொள்வதில் ஈடு இணையற்ற ஆற்றலையும் மீள்திறனையும் வெளிப்படுத்திய காலமாக வரலாற்றுப் புத்தகங்களில் பொறிக்கப்படும். 2023-ம் ஆண்டில் இஸ்ரோவின் சாதனைகளின் உச்சமாக, சந்திரயான் -3 நிலவின் அறியப்படாத தென் துருவப் பகுதியில் வெற்றிகரமாக மென்மையாக தரையிறங்கியது" என விருதுக்கான குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் ஜிதேந்திர சிங், சந்திரயான்-3 உள்நாட்டில் உருவாக்கப்பட்டதோடு, சுமார் ரூ.600 கோடி மதிப்பீட்டில் மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டது என்றும் கூறினார். ஆதித்யா செலுத்தப்படுவதைக் காண 10,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள், 1,000-க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் வந்திருந்தனர், அதே எண்ணிக்கையில் சந்திரயான்-3 நிலவில் தரையிறங்கிய போதும் மக்கள் இருந்ததாக அவர் கூறினார்.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு, விண்வெளித் துறையில் ஒரே ஒரு புத்தொழில் நிறுவனம் மட்டுமே இருந்த நிலையில், தற்போது 190 தனியார் விண்வெளி புத்தொழில் நிறுவனங்கள் உள்ளதாக அவர் தெரிவித்தார். நடப்பு நிதியாண்டில் 2023 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை தனியார் விண்வெளி புத்தொழில் நிறுவனங்கள் ரூ.1,000 கோடிக்கு மேல் முதலீடு செய்துள்ளதாக அவர் கூறினார்.

## உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியல்: முதலிடத்தில் 6 நாடுகள்; எந்த இடத்தில் இந்தியா?

**புதுடெல்லி:** 2024-ம் ஆண்டுக்கான உலகின் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் பட்டியலான ‘ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ்’ வெளியிட்டுள்ளது. இதன்படி பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய ஐரோப்பிய நாடுகளும், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய ஆசிய நாடுகளும் முதலிடம் பிடித்துள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் தொடர்ந்து முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டு வருகிறது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தான், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் முறையே 101, 102, 103, 104 ஆகிய இடங்களைப் பிடித்து பட்டியலில் பின்தங்கியுள்ளன. இந்தியாவின் பிற அண்டை நாடுகளான மாலத்தீவு 58-வது இடத்தையும், சீனா 62-வது இடத்தையும், பூடான் 87-வது இடத்தையும், மியான்மர் 92-வது இடத்தையும், இலங்கை 96-வது இடத்தையும், வங்கதேசம் 97-வது இடத்தையும், நேபாளம் 98-வது இடத்தையும் பெற்றுள்ளன.

இந்தத் தரவரிசைப் பட்டியலில் இந்தியா தனது முந்தைய இடமான 80-வது இடத்தை இந்த ஆண்டும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்திய பாஸ்போர்ட் மூலமாக 62 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸால் வெளியிடப்பட்டிருக்கும் 2024-ம் ஆண்டுக்கான சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் தரவரிசை ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாஸ்போர்ட்

மூலம் எத்தனை நாடுகள் அல்லது இடங்களுக்கு விசா இல்லாமல் பயணம் செய்ய முடியும் என்ற அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

உதாரணமாக, இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ள நாடுகளின் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 194 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். பட்டியலில் கடைசி இடத்தில் உள்ள ஆப்கானிஸ்தான் நாட்டு பாஸ்போர்ட் மூலமாக 28 நாடுகளுக்கு மட்டுமே விசா இல்லாமல் பயணிக்க முடியும். இவை அனைத்தும் சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் (IATA) தரவுகளின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் பின்லாந்து, ஸ்வீடன் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளன. ஆஸ்திரேலியா, டென்மார்க், நெதர்லாந்து ஆகிய நாடுகள் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன. அமெரிக்க பாஸ்போர்ட்டானது கனடா மற்றும் ஹங்கேரி நாட்டு பாஸ்போர்ட்களுடன் 7-வது இடத்தை பகிர்ந்து கொள்கிறது. இங்கிலாந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகளுடன் 4-வது இடத்தை பிடித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகம் 11-வது இடத்தை பிடித்துள்ளது. இஸ்ரேல் 21-வது இடத்தில் உள்ளது. இதனிடையே ரஷ்யா 51-வது இடத்தில் உள்ளது.

சர்வதேச குடியுரிமை மற்றும் குடியிருப்பு குறித்த ஆலோசனைகள் வழங்கும் நிறுவனமான ஹென்லி அண்ட் பார்ட்னர்ஸ் என்ற லண்டனை அடிப்படையாக கொண்டு இயங்கும் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸை வெளியிட்டு வருகிறது. இது உலகின் அனைத்து பாஸ்போர்ட்களின் அசல் தரவரிசை என்று கூறப்படுகிறது. இது, உலகின் 227 இடங்களையும், 199 நாடுகளின் பாஸ்போர்ட்களையும் உள்ளடக்கியுள்ளது

## மாலத்தீவில் வெளிநாட்டு தலையீட்டை உறுதியாக எதிர்க்கிறோம்: சீனா

**பெய்ஜிங்:** மாலத்தீவில் வெளிநாட்டு தலையீட்டை உறுதியாக எதிர்ப்பதாக சீனா தெரிவித்துள்ளது. மேலும், மாலத்தீவின் சுற்றுலா

வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவும், இந்தியாவுக்கு எதிராகவும் மாலத்தீவு அமைச்சர்கள் 3 பேர் கருத்து தெரிவித்ததை அடுத்து, அந்நாட்டுக்கு சுற்றுலா செல்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும் என்ற பிரச்சாரம் நமது நாட்டில் தீவிரமடைந்தது. இந்நிலையில், சீன ஆதரவாளராகக் கருதப்படும் மாலத்தீவு அதிபர் முகம்மது மொய்சு கடந்த 8-ம் தேதி சீனா சென்றார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கை நேற்று சந்தித்த மாலத்தீவு அதிபர், அந்நாட்டு பிரதமர் லீ கியாங்கை இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், "இரு நாடுகளின் முக்கிய நலன்களை தொடர்ந்து உறுதியாக ஆதரிப்பது என இரு தரப்பும் ஒப்புக்கொள்கிறது.

தனது நாட்டின் இறையாண்மை, சுதந்திரம், தேசிய கவுரவம், மரியாதை ஆகியவற்றை மாலத்தீவு உறுதிப்படுத்திக் கொள்வதை சீனா உறுதியாக ஆதரிக்கிறது. மேலும், மாலத்தீவு தனது தேசத்தின் நிலைமைக்கு ஏற்ப தனக்கான வளர்ச்சிப் பாதையை ஆராய்வதை சீனா ஆதரிக்கிறது. அதோடு, மாலத்தீவின் உள் விவகாரங்களில் வெளிப்புற தலையீட்டை சீனா உறுதியாக எதிர்க்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையில் மாலத்தீவு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "ஒரே சீனா கொள்கையை மாலத்தீவு உறுதியாக ஆதரிக்கிறது. தைவான் சீனாவின் பிரிக்க முடியாத பகுதி. சீனாவின் இறையாண்மையை குறைத்த மதிப்பிடும் எந்த ஒரு விஷயத்தையும் மாலத்தீவு எதிர்க்கிறது. சுதந்திர தைவான் என்பது பிரிவினைவாத நடவடிக்கை. தைவானுடன் அதிகாரபூர்வ உறவை மாலத்தீவு ஒருபோதும் கொள்ளாது. சீனாவின் உள் விவகாரங்களில் வெளிப்புற தலையீட்டை மாலத்தீவு எதிர்க்கிறது. தேசிய

ஒருங்கிணைப்புக்காக சீனா எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் மாலத்தீவு ஆதரிக்கிறது" என்று மாலத்தீவு தெரிவித்துள்ளது.

மாலத்தீவின் சுற்றுலா வளர்ச்சிக்கு சீனா ஒத்துழைக்கும் என்பது உள்பட இரு நாடுகளுக்கு இடையே 20 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. மாலத்தீவுக்கு சுற்றுலா செல்லும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையில் ரஷ்யா முதலிடத்திலும், இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பயணிகளுடன் இந்தியா இரண்டாம் இடத்திலும், சீனா மூன்றாம் இடத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS ACADEMY